16th March 1960]

(ஈ) ஆமென்றால் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எஃகு தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*d*) The State Geologist has commenced investigation of the bauxite deposits in the Nilgiris district with the assistance of the special staff and equipment sanctioned by Government for the purpose. As the investigation is only in the preliminary stages, an indication of the extent of the occurrence of the ore cannot be given. The further plans for the exploitation of the ore will no doubt depend on the quantity of and quality of ore available.

SRI J. MATHA GOWDER : சார், நீலகிரியிலே 20 லட்சம் டன் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கக்கூடும் என்று ஆராய்ச்சிக்குழு அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதுவுமல்லாமல் பாக்ஸைட் போன்ற படிவங்கள் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அது என்ன ஆயிற்று என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கண்டுபிடிக்க முடியாது. அது 'ஓர்' அல்ல. முதலில் இரும்புக் கனிப் பொருள்களைக் கண்டு பிடிக்கவேண்டும். அதை இரும் பாக்கவேண்டும். அதற்குப் பிறகு அதை 'ஸ்டீல்' ஆகச் செய்ய வேண்டும். ஸ்டீலாகச் செய்த பிறகு, அதை ஸ்டெயின்லெஸ் ஸ்டீலாக மாற்றவேண்டும். அதெல்லாம் மானுபாக்சரிங் ப்ராஸெஸ். நாசுரல் ஓர் அல்ல.

Aluminium and Iron ore deposits in the Nilgiris district

***405 Q.—SRI S. M. ANNAMALAI AND SRI N. K. PALANISAMI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

நீலகிரியில் அலுமினியம், இரும்புக்கனிகள் கிடைப்பதைத் தோண்டி எடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Geologist has taken up the investigation of bauxite and iron ore deposits in Nilgiris district. These investigations are being pushed through vigorously with the assistance of the special staff and equipment sanctioned by the Government for the purpose.

SRI N. K. PALANISAMI : நீலகிரியில் கிடைக்கக்கூடிய இரும்பு நல்ல இரும்பு என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ப்ளானிங் கமிஷன் முதல் கூட்டத்தில் 'மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நம் மாகாணத்தில் ஏற்படப் போகிறது' என்று சொல்லிவிட்டு, இப்பொழுது 'ஆலோசனையில் இருக்கிறது' என்று சொல்வதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆலோசனை பண்ணமல் சர்க்கார் ஒன்றும் செய்வதில்லை. அதனுல்தான் ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

SRI A. GOVINDASAMY : நீலகிரியில் கிடைக்கும் இரும்புக் கனி வளத்தை கோயம்புத்தூரிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் உபயோகப் படுத்துவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது பலனளிக்கும் விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவையில் டெக்ஸ்டைல் கம்பெனியார் 50 டன்னுக்கு ஒரு சிறு ப்ளாண்ட் போட்டார்கள். ஆனல், அதனுடைய 'இகனமிக்ஸ்' அதாவது கட்டுப்படியாகக் கூடிய நிலைமை சரியாகத் தெரியவில்லை. ஆனல், அந்த கனிப் பொருளை உபயோகப்படுத்த முடியும் என்று சர்க்கார் பரிசீலனை செய்து நிர்ணயம் செய்திருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : நீலகிரியில் ஏராளமாக இரும்புக் கனி வளம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிற்பாடும் கூட, அந்த இரும்பைக் காய்ச்சி உருக்கும் தொழிற்சாலை சில மைல் தூரத்திற்கப்பால்தான் கட்டவேண்டுமென்று நிபுணர்கள் அபிப்பி ராயப் படுவதால் கோவை ஜில்லாவில்தான் அந்த இரும்புத் தொழிற்சாலை கட்டவேண்டியதாக இருக்குமோ என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது கேள்வி அல்ல. கனம் அங்கத்தினர் அவர்கள் அப்ளிகேஷன் போட்டால் சர்க்கார் கவனிக்கும். (சிரிப்பு.)

Montessori system of education

* 406 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to encourage Montessori system of education?

THE HON. SRI C. SUBRAMANIAM : Grants are given from State funds for institutions of this type.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி இன்ஸ்டிட்யூஷன்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? ப்ரி-ப்ரிபரேடரி ஸ்கூல்களை அதிகப்படுத்து வதற்குப் பதிலாக மாண்டிசோரி முறைப் பள்ளிகளை விஸ்தரிக்க சர்க்கார் ஏதாவது யோசனை செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஒரு முக்கியமான திட்டம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், இதை விட முக்கியமான திட்டம் இருக்குமானல், அதற்கு முதலிலே அதிகமான பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், இப்பொழுது ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே 6 முதல் 11 வயது வரையிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் கொண்டுவரக்கூடிய